4-7-1991 ஆம் நாளன்று ஆளுநர் அவையில் உரையாற்றத் தொடங்கும்போது நடைபெற்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

1991ஜூலை 5]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவருடைய அனுமதி இல்லாமல் எந்தவொரு உறுப்பினரும் எந்தக் கருத்தையும் விதி முறைகளுக்கு அப்பாற்பட்டுப் பேசக் கூடாது. அந்த வகையில் பேரவைத் தலைவர் அவர்கள் பேசுகின்றபோது வேறு ஒருவர் நின்று கொண்டு பேசக்கூடாது. அது மட்டுமல்ல. பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பை அளித்திடுவார்களேயானால் அதை எதிர்த்தோ, அதை மீறியோ பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு இடமில்லை என்பது விதிமுறைகளில் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதன் காரணமாக, அமைதியை நிலைநாட்டுவதற்கான ஒழுங்கு முறைகளைத் தாங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

2. இரங்கற் குறிப்புகள்.

9-05 மணி

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : (குறுக்கீடு) இரங்கற் குறிப்புகள் நேரத்தில் குறுக்கிடுவது மரபல்ல, அருள்கூர்ந்து அமர வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் விபரம் அறிந்தவர். இரங்கற் குறிப்புகளை அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நேரத்தில் பேசுவது மரபல்ல என்பது உங்களுக்குத் தெரியும். இப்போது இரங்கற் குறிப்புகள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. ஆண்டி என்கிற கு. குருசாமி அவர்கள் 30-8-1990ஆம் நாளன்றும், திரு. இ. எஸ்.எம். பக்கீர் முகமது அவர்கள் 28-1-1991ஆம் நாளன்றும், திரு. ப. வெங்கட சுப்பிரமணியன் அவர்கள் 4-2-1991 ஆம் நாளன்றும், திரு. எம். அழகிரிசாமி அவர்கள் 10-2-1991 ஆம் நாளன்றும், திரு. கே. பொன்னையா அவர்கள் 14-2-1991ஆம் நாளன்றும், திரு. மு. ச. சிவசாமி அவர்கள் 17-2-1991ஆம் நாளன்றும், திரு. ஏ.எல். இராமகிருஷ்ண நாயக்கர் அவர்கள் 1-4-1991ஆம் நாளன்றும், திரு. கா. செங்கோடன் அவர்கள் 2-4-1991 ஆம் நாளன்றும், திரு. எஸ்.எஸ். தென்னரசு அவர்கள் 13-4-1991 ஆம் நாளன்றும், திரு. சொ. கோவிந்தராஜன் அவர்கள் 29-4-1991 ஆம் நாளன்றும், திரு. மு.சி.ஆ. இரத்தினசாமித் தேவர் அவர்கள் 7-5-1991ஆம் நாளன்றும், திரு. ஏ.கே. காளியப்ப கவுண்டர் அவர்கள் 11-6-1991ஆம் நாளன்றும், திரு. ஏ.ஆர். சுப்பையா அவர்கள் 21-6-1991ஆம் நாளன்றும் மறைவுற்றதை, இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆண்டி என்கிற குருசாமி அவர்கள், 1967 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரையிலும், 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரையிலும் அன்றைய இராமநாதபுரம் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. இ. எஸ்.எம். பக்கீர் முகமது அவர்கள் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரை, தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரையிலும், மீண்டும் 1989ஆம் ஆண்டு முதல் 1991ஆம் ஆண்டு வரையிலும் மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு. ப. வெங்கட சுப்பிரமணியன் அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையிலும் செங்கல்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஊக்கத்தோடும், எழுச்சியோடும் பணியாற்றியுள்ளார்.

திரு. எம். அழகிரிசாமி அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரையிலும், 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரையிலும் மதுரை மாவட்டம் கொடைக்கானல் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. பொன்னையா அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரையிலும் கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி தனித் தொகுதியிலிருந்தும், 1962ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரையிலும் அன்றைய ஆனைமலை தனித் தொதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க முறையிலே பணியாற்றியுள்ளார்.

திரு. மு.ச. சிவசாமி அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையில் அன்றைய திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரையிலும் பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றி உள்ளார்.

1991 ஜூலை 5] [பேரவைத் தலைவர்]

திரு. ஏ.எல். இராமகிருஷ்ண நாயக்கர் அவர்கள் 1962ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரையில் அன்றைய திருநெல்வேலி மாவட்டம் ஒட்டப்பிடாரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரியமுறையில் செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. கா. செங்கோடன் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டம் கபிலர் மலைத் தொகுதியில் இருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். எஸ். தென்னரசு அவர்கள் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரையில் பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஊக்கத்தோடும், ஆர்வத்தோடும் பணியாற்றியுள்ளார். 1970ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரையில் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

9-10 மணி

திரு. சொ. கோவிந்தராஜன் அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரையில் மதுரை மாவட்டம், மதுரை மத்திய தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. மு.சி.ஆ. இரத்தினசாமித் தேவர் அவர்கள் 1971ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரையில் மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆர்வத்தோடும், ஊக்கத்தோடும் பணியாற்றியுள்ளார்.

திரு. ஏ.கே. காளியப்ப கவுண்டர் அவர்கள் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையில் கோயம்புத்தூர் மாவட்டம் நம்பியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஏ.ஆர். சுப்பையா அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரையில் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் பொதுத் தொகுதியிலிருந்தும், 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரையில் தென்காசி தொகுதியிலிருந்தும், 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை

யிலும் மற்றும் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரையிலும் கடையநல்லூர் தொகுதியிலிருந்தும் தொடர்ந்து நான்கு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டு பலரும் பாராட்டத்தக்க வகையில் பணி யாற்றியுள்ளார்.

அன்னார்கள் மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவை சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித் துளிகள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள் கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : திருமயம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்றப் பேரவையில் பணியாற்றி யுள்ள புலவர் பொ. பொன்னம்பலம் அவர்கள் இயற்கை எய்தி யுள்ளார். அவர்கள் மறைவு குறித்து செய்தி வரவில்லையா? அதையும் சேர்த்துக் கொள்ளலாமே. ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது தனியாக வரும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புலவர் பொ. பொன்னம்பலம் அவர்கள் மறைவு குறித்தும் சேர்த்துக் கொள்ளலாம்.

திரு. ஜி. பழனிசாமி : தலைவர் அவர்களே, சீர்காழித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமன்றப் பேர வையில் பணியாற்றியுள்ள திரு. எஸ். வடிவேல் அவர்கள் சமீபத்தில் இயற்கை எய்தியுள்ளார். அது குறித்தும் தீர் மானத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : தலைவர் அவர் களே, 'அபிஷியல் இன்டிமேஷன்' வந்தால்தான் இரங்கற் குறிப்பில் சேர்த்துக்கொள்வது வழக்கமாகும். இருப்பினும், இப்போது உறுப்பினர்கள் தெரிவித்த தகவலின்படி இவர் களின் பெயர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையினுடைய ஏகோபித்த வேண்டுகோளாக இதைக் கருதி திருமயம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தச் சட்டப்பேரவையில் நல்ல முறையில் பணியாற்றியுள்ள புலவர் பொ.பொன்னம்பலம் அவர்கள் மறைவு குறித்தும், சீர்காழித் தொகுதியிலிருந்து இந்தப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியுள்ள திரு எஸ். வடிவேல் அவர்கள் மறைவு குறித்தும் இப்பேரவை தனது

ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது என்பதையும் இரங்கற் குறிப்புகளோடு இணைத்துக் கொள்ளலாம்.

இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்).

9-15 மணி

3. இரங்கல் தீர்மானங்கள்.

(அ) முன்னாள் பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பேரவையின் முன்னாள் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் 1-7-1991 அன்று மறைந்த செய்தியை இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் மறைவுக்கு இரங்கலைத் தெரிவிக்கும் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்.

''1962-67, 1967-71, 1971-76 ஆகிய ஆண்டுகளில் சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், இப்பேரவையின் துணைத் தலைவராகவும், பின்னர் பேரவையின் தலைவராகவும் திகழ்ந்து, அரும்பணிகள் பலவற்றையும் ஆற்றி, பலரின் பாராட்டுதல்களையும், போற்றுதல்களையும் பெற்று, நல்ல பல தமிழ் நூல்களையும் எழுதி, பெயரோடும், புகழோடும் திகழ்ந்தவராகிய புலவர் கோவிந்தன் அவர்கள் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை பெருவருத்தம் கொள்வதோடு, அன்னாரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினர்க்கும், உற்றார்க்கும் இப்பேரவை தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது''.

இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.)